**திருத்தூதரக பாவமன்னிப்புக்கான அகநிலை பிரிவின் உள்மன்றம் மற்றும் மீறப்படமுடியாத ஒப்புரவு அருளடையாள முத்திரையின் முக்கியத்துவம் பற்றிய ஆவணம்**

“கடவுளுடைய மகன் அவருடைய மனுவுருவாக்கத்தினால் தன்னை ஒவ்வொரு மனிதனுடனும் இணைத்துள்ளார்” அவருடைய செயல்களினாலும், வார்த்தைகளினாலும், அவர் அவருடைய வெற்றிகொள்ளப்பட முடியாத மகத்துவத்தை வெளிச்சப்படுத்தியிருக்கின்றார். இறந்து உயிர்த்த அவரில், பாவத்தினுடைய மற்றும் சாவினுடைய இருளை வெற்றிக்கொண்டு அவர் விழுந்த மனிதத்தை புதுப்பித்திருக்கின்றார். அவரில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு, தந்தையோடு உறவு கொள்வதற்கு வழிவகுத்திருக்கின்றார். பரிசுத்த ஆவியின் பலத்தினால், திருச்சபையை ஒரு விசுவாசிகளின் குடும்பமாக, அவருடைய உண்மையான உடலாகப் புனிதப்படுத்தியிருக்கின்றார் மற்றும் அவருடைய இறைவாக்கினருக்குரிய, அரசருக்குரிய, குருத்துவத்திற்குரிய சக்தியில் பங்கெடுத்து இந்த உலகில் அவருடைய பிரசன்னத்தின் மற்றும் பணியின் நிட்சியாக இருந்து, உண்மையை அனைத்து மக்களுக்கும் அறிவித்து, அவர்களை ஒளியின் மகத்துவத்திற்கு வழிநடத்தி, அவர்களுடைய வாழ்வை தொட்டு உருமாற செய்துள்ளார்.

இந்த பாதிக்கப்பட்ட மனித வரலாற்றில், உயர்ந்துவரும் அதநவீன அறிவியல் முன்னேற்றம் அற மற்றும் சமூக விழுமியங்களோடு ஒத்துப்போகவில்லை. மாறாக, இது உண்மையான பண்பாட்டு மற்றும் ஒழுக்கநெறி பரிணாமத்திற்கு இட்டுச் செல்வதோடு, கடவுளை மறந்து, மனித இருப்புக்கான மற்றும் திருச்சபையின் வாழ்வுக்கான தேவைகளை கண்டுகொள்ளாமல் மற்றும் மதியாமல் இருக்கின்றது.

நவீன முன்னேற்றம் மனிதனுடைய அறநெறி உருவாக்கத்திற்கு ஒத்துப்போகவில்லையென்றால், அது முன்னேற்றமல்ல. மாறாக மனிதனுக்கும் உலகிற்கும் அது ஒரு அச்சுறுத்தல். அதோடு, தனிப்பட்ட மற்றும் பொதுவான சமூக ஊடகங்களில், நுணுக்க செயல்பாடுகள் வளர்கின்றது. ஆனால், உண்மைக்கான அன்பும் அதை அடைவதற்கான முழுமையான ஈடுபாடும்,

கடவுளுக்கும் மனிதனுக்குமான பொறுப்புணர்வும் இல்லை. அதோடு, அறநெறிக்கும் வாழ்வுக்குமுள்ள தொடர்பும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. சமூகஊடகங்கள் உண்மைக்கெதிராக திரிந்து நிற்பதால், மனிதனுக்கெதிராக, கடவுள்கெதிராக, இயேசுவுக்கெதிராக, திருச்சபைக்கெதிராக அவருடைய உண்மையான பிரசன்னத்திற்கெதிராக சான்றுபகர்ந்துகொண்டு இருக்கின்றது.

இந்த ஆண்டுகளில் தகவல்களுக்கான தேடல் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. ஆனால், நம்பகத்தன்மை குறைகிறது. மனிதர்களின் பார்க்கின்ற கோணங்களையும், புரிகின்ற விதங்களையும் நிபந்தனைபடுத்தி ஊடகங்களின் உலகம் உண்மையை மாற்றுகின்றது. இதற்கு திருச்சபையின் தளமும் விதிவிலக்கல்ல. அடிக்கடி விசுவாசிகளுக்கிடையில் அவர்களுடைய பலமும் சக்தியும் இத்தகையை செய்திகளை, தகவல்களை, அவர்களின் சுவையை திருப்திபடுத்தும் வகையிலான செய்திகளை தேடுவதில் செலவிடப்படுகின்றது. இவையனைத்தும் நற்செய்தியை அறிவிப்பையும் பணியையும் பாதிக்கின்றது. இதில் குருக்களும் உயர்மட்டத்தில் இருக்கின்றவர்களும் அடங்கும்.

மக்களுடைய பொதுவான தீர்ப்பிடுகின்ற போக்கு திருச்சபையை தொடுவதோடு மட்டுமல்லாமல் பிறருடைய பெயரையும், புகழையும் கெடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் புகழை தக்கவைப்பதையும் கெடுக்கின்றது. இந்நிலையில், புனித பவுல் கலாத்தியர்களுக்கு கூறிய வார்த்தைகளான ‘‘சகோதரரே, நீங்கள சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இநதச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செயயுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலபப் பிறனிடத்திலும அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வாாத்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும நிறைவேறும். நீங்கள ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீா்களானால் அழிவீர்கள், அபப்டி ஒருவராலொருவர் அழிக்கபப்டாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்ற வாக்குகள் நினைவுகூரத்தக்கவை’’ (கலா. 5 : 13-15).

இந்த சுழலில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட குழப்பமான எதிர்மறை தப்பெண்ணம் இருப்பதாக தெரிகிறது. அதன் இருப்பு ஒருபுறம் கலாச்சார ரீதியாக முன்வைக்கப்பட்டு திருச்சபையின் படிநிலைகளுக்குள் ஏற்படக்கூடிய பதட்டங்களின் வெளிச்சத்திலும் சமூக ரீதியாக மீண்டும் கட்டமைக்கப்படுகிறது. இது மறுபுறம் குருமார்களால் செய்யப்பட்ட துஸ்பிரயோகத்தின் சமீபத்திய பயங்கரமான முறைகேடுகளிலிருந்து வெளிப்படுகிறது. இந்த தப்பெண்ணம் திருச்சபையின் உண்மையான தன்மை அதன் உண்மையான வரலாறு மற்றும் மனித வாழ்க்கையில் அவர் எப்போதும் வைத்திருக்கும் உண்மையான, நன்மை பயக்கும் இருப்பை மறந்து, சில சமயங்களில் திருச்சபை தானே, சில விசயங்களில் நியாயப்படுத்த முடியாத கூற்றாக மாறுகிறது. அதன் விளைவாக திருச்சபை தனது சொந்த நீதித்துறை முறையை சிவில் அமைப்புகளுடன் ஒத்துப்போக வேண்டும். இத்தகைய போக்கு சரியான தன்மை மற்றும் நேர்மைக்கான உத்திரவாதத்தை தருகின்றது.

இவையனைத்தையும் கருத்தில் கொண்டு, திருத்தூதரக பாவமன்னிப்புக்கான அகநிலை இந்த ஆவணத்துடன் தலையிடுவது பொருத்தமானது. அருட்சாதன முத்திரை உள் மற்றும் வெளிக் காரியங்களில் நம்பகத்தன்மை, தொழில் ரகசியம், மற்ற தகவல் தொடர்புகளுக்கும் சரியான வரம்புகள் மற்றும் காரணிகள் போன்ற பலருக்கும் குறிப்பாக சிவில் நீதித்துறைக்கும் தெரியாத கருத்துக்களை இந்த குறிப்பின் மூலம் தெரியவைப்பதும் அதோடு புரிய வைப்பதற்குமான ஊக்குவித்தலும் அவசியமாகிறது.

### 1. அருளடையாள இரகசியம் முத்திரை

சமீபத்தில் ஒப்புரவு அருட்சாதனத்தின் புனிதத்தைப் பற்றிப் பேசிய பாப்பரசர் பிரான்சிஸ், அருளடையாள முத்திரையின் இன்றியமையாதத் தன்மையையும் அதன் அணுக முடியாத தன்மையையும் மீண்டும் உறுதிப்படுத்த விரும்பினார்: ஒப்புரவு என்பது திருச்சபை தன்னுடைய ஞானத்தினாலும் தார்மீக மற்றும் சட்ட வலிமையுடன் அருளடையாள முத்திரையுடன் எப்போதும் பாதுகாக்கப்பட்ட ஒரு நன்மை. நவீன மனநிலையால் இது எப்போதும் புரிந்து

கொள்ளப்படாவிட்டாலும், அருளடையாளத்தின் புனிதத்தன்மைக்கும், வருந்துபவரின் மனச்சாட்சியின் சுதந்திரத்திற்கும், கடவுளுடைய அருளுக்கும் அருட்தந்தையின் உதவியோடு திறந்த மனத்தோடு இருக்கும் ஒருவருக்கு எந்த நேரத்திலும், புனிதமான உரையாடல் இரகசியத்திற்குள் இருக்கும் என்பது இன்றியமையாதது. எந்தவொரு மனித சக்தியும் ஒப்புரவு அருட்சாதன இரகசியத்தின் மிது அதிகார வரம்பைக் கொண்டிருக்கவில்லை. அதற்கு எந்தக் கோரிக்கையும் கொண்டிருக்கமுடியாது.

ஒப்புரவு அருட்சாதனத்தின் மீறமுடியாத இரகசியம் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக உரிமையிலிருந்து நேரடியாக வந்து அருட்சாதனத்தின் இயல்பிலேயே வேரூன்றியுள்ளது. எனவே, திருச்சபையிலும், அல்லது எல்லாவற்றிற்கும் மேலாக சிவில் துறையிலும் விதிவிலக்கையும் ஒப்புக்கொள்ள முடியாது. உண்மையில், ஒப்புரவு அருளடையாளக் கொண்டாட்டம் கிறிஸ்தவம் மற்றும் திருச்சபையின் சாராம்சத்தைப் போன்றது. கடவுளின் மகன் நம்மைக் காப்பாற்ற மனிதனாக ஆனார். திருச்சபையை ஒரு தேவையான "கருவியாக" ஈடுபடுத்த முடிவு செய்தார். அவற்றில் அவர் தேர்ந்தெடுத்தவர்கள் மற்றும் அழைக்கப்பட்டவர்கள் பணியாளர்களாக உருவாக்கப்பட்டார்கள்.

இந்த உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டு, திருச்சபை எப்போதும் குருவானவர்கள், *persona Christi Capitis*. கிறிஸ்து தன்னுடைய நான் என்பதை நாம் பயன்படுத்த அனுமதிக்கின்றார். நாம் அவரின் பெயரால் உரையாடுகின்றறோம். கிறிஸ்து நம்மை தன்னோடு ஈர்த்து தன்னோடு இணைத்துக்கொள்கின்றார். இத்தகைய இணைப்பு குருவானவர் சொல்லும் பாவங்களை அகற்ற சொல்ல பயன்படுத்தும் செபத்தில் உருவாக்கம் பெறுகின்ற. நான் உன்னை "பாவங்களிலிருந்து தூய்மை ஆக்குகின்றேன" என்பது கிறிஸ்து மட்டுமே செய்யக்கூடிய ஒன்று.

குருவானவரிடம் செல்கின்ற ஒவ்வொரு பாவியும் கடவுளின் உருமாற்ற மறைபொருளிற்கும், திருச்சபையின் இயற்கைக்கு அப்பாற்பட்ட இருப்பிற்கும்,

பணிக்குருத்துவத்திற்கும் சாட்சியாக விளங்குகின்றார். இதன் வழியாக உயிர்த்த இயேசு மனிதனை அருளடையாளத்தின் மூலமாக சந்திக்க வருவதோடு அவர்களை தொட்டு மீட்கின்றார். இந்தக்காரணத்தால், அருளடையாள இரகசயம் ஒருபாதரியாரால் காப்பாற்றப்பட வேண்டும். ஏனென்றால் அவர் பாவிக்கு கடமைமிக்க விசுவாசத்தோடு இருப்பதோடு கிறிஸ்துவின் மற்றும் திருச்சபையின் மீட்பு பணியின் தேவையான சாட்சியாக அதாவது மறைசாட்சியாக இருக்கின்றார்.

லத்தீன் திருச்சபையின் சட்டம் எண். 983-984 மற்றும் 1388, §1 மற்றும் கிழக்கு திருச்சபையின் சட்டம எண் 1456 மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எண் 1467 போன்ற ஆவணங்கள் இரகசிய முத்திரை என்பது ஒப்புரவு அருட்சாதனம் செய்யும் ஒவ்வொரு குருவானவராலும பாதுகாக்கப்படவேண்டும் என்று தெளிவுப்படுத்துகின்றது.

பாவமன்னிபாளர் சொல்லாலோ அல்லது வேறு எந்த விதத்திலோ மனம் வருந்துவோரை எக்காரணம் கொண்டு காட்டிக்கொடுப்பது முற்றிலும் தடைச்செய்யப்பட்டுள்ளது (திருச்சபை சட்ட எண். 983, §1). பாவமன்னிப்பாளர் மனம் வருந்துவோருக்கு தீமை பயக்கும் விதத்தில் பாவ அறிக்கையிலிருந்து பெற்ற தகவல்களைப் பயன்படுத்த, இரகசியம் வெளியிடும் எவ்வித ஆபத்தும் தவிர்க்கப்பட்டாலும்கூட தடைச் செய்யப்பட்டுள்ளார் திருச்சபைச் சட்ட எண். 984, §1). அருளடையாள முத்திரை மனம்வருந்தி ஒப்புரவு செய்கின்ற சாவான மற்றும் அற்ப பாவங்கள் மற்றும் அவர் அறிக்கையிட்டதிலிருந்து தெரிந்து கொண்டவைகள் மற்றும் பலருக்கும் தெரிந்த மற்றும் தெரியாத அனைத்தையும் உள்ளடக்கும். ஒருவேளை ஒப்புரவு அருளடையளம் வழங்கும் குரு பாவமன்னிப்பு வழங்காவிட்டாலும், அல்லது ஒப்புரவு அருளடையாளம் செல்லாத ஒன்றாக ஆனாலும் அருளடையாள முத்திரை எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும்.

குருவானவர் பாவங்களை அறிய வரும்போது அவர் அறிய வருவதில்லை. மாறாக, கடவுளின் பெயரால் அறிய வருகின்றார். அவர் மனிதராக அல்ல மாறாக

கடவுளாக செயல்படுகின்றார், பாவங்களை அறியவருகின்றார். ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் குரு எனவே தான் கடவுளின் பணியாளராக கேட்கின்றார் தெரிய வருகின்றார் என்பதை உறுதிப்படுத்த சத்தியம் வழங்கலாம்.

அருளடையாள முத்திரை ஒரு குருவானவரை ஒருவர் பாவங்களை வேண்டுமென்று மனமுவந்து நினைவு கூர்வதிலிருந்தும், அதோடு தன்னை அறியாமலேயே நினைவுகூர்கின்ற தருணங்களிலிருந்தும் தன்னை தடுத்துகொள்ள வேண்டும். அருளடையாள முத்திரை ஒப்புரவு அருட்சாதனத்தில் ஈடுபட்ட அனைவரையும் கட்டுப்படுத்துகின்றது. ஒருவேளை எடுத்து விளக்கிக்கூறுவதற்காக யாராவது அருட்சாதனத்தில் ஈடுபட்டிருந்தால் அவரையும் அருளடையாள முத்திரை பாவங்களை வெளியிடுவதிலிருந்து தடுக்கின்றது (திருச்சபை சட்ட எண் 983, §2).

ஒப்புரவு அருட்சாதனத்தின் உள்ளடக்கத்தை மனம் வருந்தி ஒப்புரவு அருட்சாதனம் செய்பவருக்கு, சடங்கிற்கு வெளியே வெளிப்படையான மற்றும் (கோரப்படாவிட்டால்), அனுமதியின்றி பேசுவதை தடுக்கின்றது. அருளடையாள முத்திரை என்பது மனம் வருந்துபவரின் விருப்பத்திற்கும் அப்பாற்பட்டது. ஏனென்றால், இந்த அருளடையாள முத்திரை என்ற கடமை கடவுளிடமிருந்து நேராக வருகின்றது.

அருளடையாள முத்திரையின் பாதுகாப்பு மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின புனிதத்தன்னை ஒருபோதும் எந்தவிதமான ஒத்துழைப்பையும் கொண்டிருக்க முடியாது. முாறாக, அவை மனிதனையும் முழு உலகத்தையும் அச்சுறுத்தும் தீமைக்கான ஒரே உண்மையான எதிர்மறை மருந்தை சுட்டிக்காட்டுகின்றது. அவை கடவுளின் அன்பிற்கு சரணடைவதற்கான உண்மையான சாத்தியத்தை உருவாக்குகின்றது. இந்த அன்பினால் தன்னை மாற்றிக் கொள்ளவும் மாற்றவும் அனுமதிக்கின்றன. ஒருவரின் வாழ்க்கையில் ஒரே மாதிரியாக ஒத்துப்போக கற்றுக்கொள்கின்றன. கிரிமினல் குற்றங்களை உள்ளடக்கிய பாவங்களின் முன்னிலையில் விடுபடுவதற்கான ஒரு நிபந்தனையாக சிவில் நீதிக்கு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய கடமையயை ஒப்புரவு செய்பவரின் மீது சுமத்துவது

ஒருபோதும் அனுமதிக்கப்படாது. எவ்வாறாயினும், ஒப்புரவு அருளடையாளத்தின் அடிப்படையில் நேர்மையான மனம்திரும்புதலும், சிர்திருத்தத்திற்காக உறுதியான நோக்கமும், செய்த தீமையை மீண்டும் செய்யயக்கூடாது என்பதும் தெளிவு. இது இந்த திருவருட்சாதனத்தின் செல்லுபடியாதலுக்கான நிபந்தனை. மற்றவர்களின் தீமைக்கு பலியாகியவராக இருந்தால், மனம் வருந்துபவரிடம், அவருடைய உரிமைகளைப்பற்றியும் அவைகளைப்பற்றி புகாரளிப்பதற்காக இருக்கின்ற நடைமுறை சிவில் மற்றும் திருச்சபை ரீதியாக இருக்கின்ற நீதித்துறை கருவிகளைப்பற்றியும் எடுத்துசொல்லவேண்டும்.

அருளடையாள முத்திரையினை மீறுவதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு அரசியலட நடவடிக்கையும் அல்லது சட்ட முயற்சியும் திருச்சபையின் சுதந்திரத்திற்கு (*libertas Ecclesiae*) எதிரான ஏற்றுக்கொள்ளப்பட முடியாத குற்றமாக இருக்கும். திருச்சபையின் சுதந்திரம் கடவுளிடமிருந்து வருகின்ற ஒன்று. அப்படி இத்தகைய திருச்சபையின் சுதந்திரம் மீறப்படுபது மதச்சுதந்திரத்திற்கு எதிரானது மட்டுமல்லாமல் தனிமனித மனச்சாட்சியின் சுதந்திரத்திற்கு எதிரானது. அருளடையாள முத்திரையினை மீறுவது பாவமன்னிப்பு கேட்கும் மனிதனுக்குள் இருக்கும் மோசமான மனிதனை மீறுவதற்கு ஒப்பாகும்.

## 2. உள் கூடுதல் அருளடையாள மன்றம் மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல்

உள் மன்றத்தின் நீதித்துறை-அறநெறி கோளத்தில்கூடுதல் அருளடையாள உள்மன்றமும் அடங்கும். ஆவை மறைக்கப்பட்டதாக இருந்தாலும் ஒப்புரவு அருளடையாளத்திற்கு புறம்பானவை. அதிலும் திருச்சபை தனது பணி மற்றும் மீட்பு அதிகாரத்தை பாவங்களை மன்னிப்பதன் மூலம் அல்ல மாறாக அருளை வழங்குவதன் மூலமும், சட்டரீதியான தடைகளை உடைப்பதன் மூலமும் மற்றும் ஆன்மாக்களின் பரிசுத்தமாக்குதலுக்கான எல்லாவற்றையும் சரியான, நெருக்கமான மற்றும் தனிப்பட்ட விசுவாசியின் கோளத்தில கவனித்துக்கொள்வதன் மூலமும் பயன்படுத்துகின்றது.

குறிப்பாக, ஒரு தனி விசுவாசி, தன் மனமாற்றத்திற்காக மற்றும் தன்னை புனிதப்படுத்துவதற்காக ஒரு குருவானவரிடமோ அல்லது புனிதப்படுத்தப்பட்ட பொதுநிலையினரிடமோ தன்னை ஒப்படைக்கும் ஆன்மீக வழிகாட்டுதல் உள் கூடுதல் அருளடையாள மன்றத்திற்கு சொந்தமானது.

குருவானவர் கிறிஸ்துவைப் பிரநிதித்துவப்படுத்துவதற்கான தனது பணியின் காரணமாக இந்த பணியை முப்பணி என்கின்ற புனிதப்படுத்துகின்ற, வழிநடத்துகின்ற மற்றும் பயிற்றுவிக்கின்ற பணிகளின் மூலம் மேற்கொள்கிறார்.

ஆன்மீக வழிகாட்டுதலில், விசுவாசி தன் மனச்சாட்சியின் இரகசியங்களை ஆன்மீக வழிகாட்டியின் கூறுவதன் மூலம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்கான வழியைத் தேடிக்கொள்கின்றார்.

எனவே, ஆன்மீக வழிகாட்டுதல் இரகசியத்திற்கா தேவையை சுட்டிக்காட்டுகின்றது (திருச்சபை சட்ட எண். 220). இது ஒப்புரவு அருளடையாளத்தைப்போன்றிருந்தாலும், ஆன்மீக வழிகாட்டி தனி விசுவாசியின் மனச்சாட்சியைப்பற்றிய தெளிவை கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உறவின் மூலம் பெற்றுக்கொள்கின்றார்.

ஆன்மீக வழிநடத்துலுக்கான சிறப்பு இரகசியத்தன்மைக்கு சான்றாக, குருத்துவ நிலைக்கு அனுமதிக்கப்படுவதற்கோ அல்லது குருமடத்திலிருந்து நபரை வெளியேற்றுவதற்கு முன்பு ஒப்புரவு அருளடையாளம் வழங்கியவரின் கருத்தைக் கேட்பதையும், அல்லது ஆன்மீக வழிகாட்டியின் கருத்தை கேட்பதையும் தண்டிக்கும் சட்டங்களை கூர்ந்து கவனித்தல் அவசியம் (திருச்சபை சட்ட எண். 240 மற்றும் கீழைத்திருச்சபை திருச்சபை சட்ட எண் 339, §2). இதுபோன்று, 2007 *Sanctorum Mater* புனிதநிலைக்கு உயர்த்துவதற்கான ஆவணங்களில் ஆன்மீக வழிகாட்டிகளை அல்லது ஒப்புரவு அருட்சாதனங்களை வழங்கியவர்களை சாட்சிகளாக அனுமதிப்பதை தடுக்கின்றது.

இந்த அவசியமான இரகசியத்தன்மை ஆன்மீக வழிகாட்டி இன்னும் இயற்கையானது. ஆவர் மூலமாக கிறிஸ்துவிடம் திரும்பும்

உண்மையுள்ளவர்களின் சுதந்திரத்தின் மறைபொருளுக்கு முன்பாக அவர் அங்கீகரிக்கபடுவதற்கும் நகர்த்தப்படுவதற்கும் கற்றுக்கொள்கின்றார். ஆன்மீக வழிகாட்டி தனது சொந்த பணியையும், தனது சொந்த வாழ்க்கையையும் கடவுளுக்கு முன்பாகவும், அவருடைய மகிமைக்காகவும், நபரின் நலனுக்காகவும், திருச்சபையின் நலனுக்காகவும் முழு உலகத்தின் இரட்சிப்பிற்காகவும் புரிந்து கொள்ள வேண்டும்.

**3. ரகசியங்கள் மற்றும் தகவல் தொடர்புக்கு உள்ளார்ந்த பிற வரம்புகள்**

இரகசிய முத்திரையின் கீழ் பகிர்ந்துகொள்ளப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் சிவில் மற்றும் திருச்சபையின் பணிகளின் நிமித்தம் பகிர்ந்து கொள்ளப்பட்ட பணிநிமித்தமான அல்லது தொழில்முறை இரகசியங்கள் உள் அருளடையாள மற்றும் கூடுதல் அருளடையாள மன்றத்திலிருந்து இயற்கையில் வேறுபட்டவை.

இத்தகைய இரகசியங்கள் இயற்கை சட்டத்தின் அடிப்படையில் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும் (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எண் 2491). ஆனால் இரசியம் பாதுகாக்கப்பட்டால், இரகசியத்தை பகிர்ந்துகொண்டவருக்கோ அல்லது மூன்றாம் நபருக்கோ, அல்லது இரகசியத்தை கேட்டுக்கொண்டவருக்கோ மோசமான தீமை ஏற்படுமாயின் அதை வெளிப்படுத்துவது நல்லது. ஆனால் இத்தகைய போக்கு விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே கடைபிடிக்கப்பட வேண்டும்.

பாப்பிறை இரகசியம் என்பது சிறப்பு இரகசியம் ஆகும். இது பணிகளின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட சத்தியங்களின் அடிப்படையில் காப்பாற்றப்படுகின்ற இரகசியம். இந்த இரகசியம் திருச்சபையின் பொதுநலனை கருத்தில் கொண்டும், ஆன்மாக்களின் மீட்பை உள்ளடக்கிய ஒன்றாகும். எனவே, இத்தகைய இரகசியங்கள் இயேசுவால் எல்லாருக்கும் விளங்கும்படியாக உருவாக்கப்பட்ட பாப்பரசரால் மட்டுமே விளக்கப்பட வேண்டிய ஒன்று.

மற்ற தகவல் தொடர்பு மற்ற துறைகள் குறித்து பொது மற்றும் தனியார் அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் திருச்சபையின் ஞானம்

இறைவனால் உச்சரிக்கப்படும் மற்றும் லூக்கா நற்செய்தியில் அடங்கியுள்ள ‘‘பிறர்உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அவைகளை நீங்கள் பிறருக்கு செய்யுங்கள்’’ என்ற பொன் விதி ஒரு அளவுகோலாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழியில், உண்மையை வெளிப்படுத்துதலில் ஒருவருக்கு அதை அறிய உரிமை இல்லாதபோம் ஒருவர் எப்போதும் ஒருவர் எப்போதும் ஒருவரது வாழ்க்கையை சகோதரத்துவ அன்பின் கட்டளைக்கு இணங்க வேண்டும். இப்படி வாழ்கின்ற பட்சத்தில் மற்றவர்களின் நல்ல மற்றும் பாதுகாப்பு தனிப்பட்ட வாழ்க்ளை மற்றும் பொது நன்மைக்கான மரியாதையை கருத்தில் கொள்ள வேண்டும்.

சகோதரத்துவ தர்மத்தால் உந்தப்பட்ட உண்மைகளை தெரியப்படுத்துவதற்கான தேடலில் கடவுளால் கற்றுத்தரப்பட்ட சகோதரத்துவ திருத்தம் கட்டயாமாக கடைபிடிக்கவேண்டும். இது அவசியமான இடத்திலும் உறுதியான தளங்கள் அனுமதிக்கும் மற்றும் தேவைகளின் அடிப்படையில் கடைபிடிக்கப்பட வேண்டும். உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து அவன் உனகுச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாடசிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெலல்லாம் நிலைவரபப்படுமப்டி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொணடு போ. அவர்களுககும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியபப்டுத்து (மத். 18.15-17).

தகவல்தொடர்பு பெருக்கத்தின் ஒருக் காலக்கட்டத்தில் அனைத்து தகவல்களும் சிதைந்து போகின்றது. அத்தோடு துரதிருக்ஷடவசமாக மக்களின் வாழ்க்கையும் சிதைந்து போகின்றது. எனவே, பேச்சின் வலிமையை மீண்டும் அறிந்து கொள்வதும், அதனுடைய உருவாக்கத்தன்மையை அதோடு பேச்சின் அழிக்கின்ற சக்தியை தெரிந்து கொள்வதும் இன்றியமையானது. எனவே, ஒப்புரவு அருளடையாள முத்திரையானது யாராலும் மீறப்படாதவாறு காப்பாற்றப்படுவது

இன்றியமையான ஒன்று. அதோடு, திருச்சபையின் பணியோடு தொடர்புபடுத்தப்பட்ட நம்பகத்தன்மை கட்டயாமாக காப்பாற்றப்பட வேண்டும்.

எனவே, நாம் பரிசுத்த ஆவியிடம் வாழ்க்கையின் எல்லா நேரங்களிலும், உண்மைக்கான அன்பை கேட்டுப்பெற்றுக்கொள்வோம். நற்செய்தியை பிறருக்கு அறிவிப்பதற்கான பலத்தைக் கேட்கவும், அருளடையாள இரகசியத்தை காப்பாற்றுவதற்காக மறைச்சாட்சியாக ஆவதற்கும், அதோடு தெரிவுகளை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்கான ஞானத்தையும் விவேகத்தையும் கேட்போம். இந்த தவறானப் பயன்பாடு மனிதனின் மாண்பை களங்கப்படுத்துவதோடு காயமும் படுத்தும்.

அருளடையாள இரகசியத்தை கவனமாக பாதுகாப்பதிலும், உள் அருளடையாள மன்றத்துடனும், மற்ற ஊழிய செயல்களுடனும் இணைக்கப்பட வேண்டிய தேவையான விவேகம் மரியன் மற்றும் பேதுரு பரிமாணங்களில் பிரகாசிக்கின்றது.

பேதுருவுடன், கிறிஸ்துவின் மணமகள் வரலாற்றின் இறுதிவரை திறவுகோலின் வலிமையைக் காக்கின்றாள். மரியாளைப்போன்று, திருச்சபை எல்லாவற்றையம் தன் இதயத்தில் பாதுகாக்கின்றாள் (லூக். 2:51). அவற்றில் ஒவ்வொரு மனிதனையும் ஒளிரச் செய்யும் ஒளி எதிரொலிக்கின்றது என்பதையும் தனிப்பட்ட மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் இடையிலான புனித இடத்தில் இது இருக்க வேண்டும், பாதுகாக்கப்படவேண்டும மற்றும் பேணப்பட வேண்டும்.